RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22277

OPEN ACCESS

# சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் சீர் சால்பு புலவர்கள்

சி. அமுதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்-613006, தமிழ்நாடு, இந்தியா

# Seer Salbu pulavars in Silappathikaram and Manimekalai

S. Amutha [a, *]

[a] Department of Tamil, Rajah Serfoji Government College, Thanjavur-613006, Tamil Nadu, India

* Corresponding Author: drsatamil@gmail.com

Received: 05-10-2022
Revised: 11-11-2022
Accepted: 18-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil people divided their lives into two parts, the Agam and Puram. It is the Sangam literature that conveys such two aspects, as well as the silapathikaram and manimekalai epics of the epics, which have always been spoken of as the greatest epic of the poets. In Dandamizh language, there are two major series, Kodai Madam and Padaimadam. It is impossible not to praise these poets who have sung. The poets of the Sangam age want to see the true meaning of this poem, not just the language in which the word 'Saints' means 'Elders'. What is the best explanation of the scholars to help the later poets to inculcate in the epics? With the introduction of the names of the great people, they can be considered as honourable donations to Tamil. The purpose of this article is to illustrate the similar views of the two great scholars of virtue.

**Keywords:** Tamil Scholars, Silapathikaram, Manimekalai, Poets

## முன்னுரை

தமிழ் மக்கள் தம் வாழ்வை இருகூறாக அகம் புறம் என வகுத்துக் கொண்டனர். அத்தகைய இரு கூறுகளை உணர்த்துவது சங்க இலக்கியம் அதுபோல காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை காப்பிய புலவர்களின் சிறப்பை மிக்க காப்பியமாக என்றென்றும் பேசப்பட்டு வருகின்றது. தண்டமிழ் மொழியில் கொடை மடம், படைமடம் என இரு பெரும் தொடர்கள் வழங்கப்பட்டு வருகின்றன அதுபோல இரு பெரும் காப்பியங்கள். அவ்வகையில் காப்பியங்கள் பாடியிருக்கும் இப்புலவர்களைப் பாராட்டாமல் இருக்க இயலாது. புலவர்களின் பண்புகள் சிலவற்றை கூறும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## சிலம்பை யாத்த சீர்சால் புலவர்

சிலம்பை யாத்த சீர்சால் புலவர் யாவாரோ என ஐயுற வேண்டாம். அவரே தண்டமிழ் மொழியில் தலைசிறந்த விளங்கு ஐம்பெரும் காப்பியங்கள் ஒன்றான சிலப்பதிகாரம் என்னும் சீரிய நூலை எழுதிய யாத்தவர் இளங்கோவடிகள். திருவள்ளுவர் தம் பொருட்பாலில் குடிமை என்னும் இயலில்,

“வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் தலைப்பிரிதல் இன்று"

என்னும் குறளைப் பாடியுள்ளார் (Balasubramaniyam, 2018). பழமையானது தொண்டுத் தொட்டு வருதல் அது சேர, சோழ, பாண்டியன் என்பது போல ஆதிகாலம் தொடங்கி இன்று வரை பழங்குடி என்று இனம் இருந்து வருகிறது.

சேர மரபினர் பாரத காலத்தில் பெரும் சிறப்புடன் வாழ்ந்தவர். கௌரவ, பாண்டியர்கள் போரிட்டபோது அவர்கள் படைகளுக்கு உண்டி கொடுத்து ஊக்கமூட்டிய உதயம் சேரலாதன் செயலால் இதனை தெள்ளத் தெளிவாக தெரியலாம்.

இன்னொரு அண்ண சீரும் சிறப்பும் வாய்ந்த சேரக்குடியில் இமயவரம்பன் நெடுஞ்செயலாளர் என்னும் மன்னன் இன்றைக்குச் சற்றேறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சேர நாட்டு மன்னனாய் திகழ்ந்து வந்தான்.

"ஆசிரியர் துவன்றி பேரிசை இமயம்

தென்னங் குமரியொ டாயிடை

மன்மீக் கூறுநர்மறந்தபக் கடந்தே"

எனப் பதிற்றுப்பத்து நூல் கூறுவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம் (Gunasekaran, 2010).

நிமித்திகன் "மன்னர் பெரும நும் மருங்கு வீற்றிருக்கும் இருவரும் உம் அருமைத் திருமக்களில் இளைய மகனுக்கே இணைந்துள்ளன" கூறிய நிமித்தகன் கூற்றுப் பொய்யாக இளங்கோவடிகள் துறவி ஆகிறார். தந்தையும் தமையனும் வழிபட்டு வந்த சைவ சமய மரபில் தோன்றியவர் இளங்கோவடிகள்.

## இளங்கோவடிகளின் வரலாறு

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைத் தவிர்த்த வேறு நூல் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இவர் இந்நூலையும் தாம் துறவு பூண்ட பின்பே யாத்திருப்பதாகத் தெரிகிறது. இவர் யாத்த இச் சிலப்பதிகார கதை இவர் காலத்தின் கதையாகவும் தெரிய வருகிறது.

இளங்கோவடிகள் தாம் சேர மரபினராய் இருந்தும், தாம் மரபின் ஆண்மையும் அரசும் இன்னோரன்ன எனைய சிறப்புகளையும் மிகுதி கூறுவதற்குரிய வாய்ப்புப் பெற்றவராக இருந்தும் , தாம் துறவு பூண்டும் தூயராய் விளங்கிய காரணத்தால் நடுநிலை பிறழாது முடிவுடை மூவேந்தருக்கு தாம் இயற்றும் நூல் உரித்தாதல் வேண்டும் என்னும் காரணத்தால் தம் நூலை புகார் காண்டம், மதுரை காண்டம், வஞ்சி காண்டம் என வகுத்துக்கொண்டு ஒவ்வொரு மன்னரது சீரும் சிறப்பும் தோன்றிடங்களில் நன்கு பாடி சென்றிருப்பதைப் படிக்குந்தோறும் யாரும் பரவசம் ஊராமல் இருக்க இயலாது. இவரது நடுநிலைமை பண்பையும் போற்றாமல் இருக்க இயலாது.

## மணிமேகலை

மணிமேகலை என்னும் மாபெரும் நூலைப் பாடிய புலவர் யார் எனில் அவரே மதுரை போல வாணிக சீத்தலை சாத்தனாராம், சங்ககாலச் சான்றோர்கள் பெருமதிப்பு பெற்றவர், பெருந்தகைராவார். இவர் பெரும் புலவராயும் பெரும் வணிகராகவும் திகழ்ந்தவர்.

இயற்பெயர் சாத்தனார் என்பதன் பெயருக்கு முன் உள்ள அடைமொழிகள் பல அறிய குறிப்புகள் நமக்கு அறிய வருகின்றன. சாத்தனார் இவரைப் போன்ற புலவர்களால் சிறப்பிக்கப்பட்ட சீர்மையோர் ஆவார். இவரோடு இணைந்து நட்புக் கொண்டிருந்த புலவர் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் இவரை குறிப்பிடும் போது எல்லாம் 'நன்னூல் புலவன்' என்றும் 'தண்டமிழ் ஆசான்', 'சாத்தான்' என்றும் குறிப்பிட்டு இவருக்கு இருந்ததன.

தண்தமிழ் அறிவையும் நல் நூல்களை இயற்றும் வன்மையினையும் ஆசிரியர் என்று போற்றதக்கப் பெருமை சான்றவர் என்பதையும் நன்கனம் புலப்படுத்தி உள்ளார்.

சீத்தலைச்சாத்தனார் இளங்கோ அடிகளின் தலமையனான சேரன் செங்குட்டுவனிடத்தில் நட்பு கொண்டிருந்தனர். அந்த நட்புக்கான முதல் கண்ணகி என்பாளது பிறப்பின் மேம்பாட்டை எடுத்து கூறியவர். கற்புடையக் கடவுளாம் கண்ணகியின் கோயில் எடுப்புக்கும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாம். காவியத்தை நாம் பெறுதற்கும் பெருங்காரணர் சீத்தலைச்சாத்தனார் என்பதை அறிந்து நாம் இன்புற வேண்டியவராகின்றோம்.

மணிமேகலையில் சிறை செய் காதையில்,

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் பெருமழை”

என்ற அப்பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் என்று கூறப்பட்டது ஆகும் (Thandapani Durai, 2005). சீத்தலை சாத்தனார் திருக்குறள் இருந்த பெருமதிப்புக்கு மேலே காட்டிய சான்று மட்டும் போதாது. நாடு, மலை, நதி, ஊர், முரசு, தமிழ் கொடி, ஊர்தி முதலிய ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பெற்றிருந்தாலும் முப்பால் ஆகிய திருக்குறள் தான் மன்னர்களுக்கு நொடியில் மாலையாக விளங்கவல்லது என்பதை,

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்

மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்

தாமுடைய மன்னர் தடமுடி மேல் தார்அன்றோ

பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்" என்ற பாடியுள்ள பாராட்டுரையும் சிறப்பு மிக்கவை (Subramaniyan, 2016a; Subramaniyan, 2016b). இதனால் திருவள்ளுவர் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர் சீத்தலைச்சாத்தனார் என்பது விளங்குகின்றது. சாத்தனார் பல பாடல்கள் பாடியிருந்தாலும் அவர்கள் எத்துணை நகரிகளும் முறையில் படித்து கூறுகின்றார் என்பதை,

“பலர்சொல்லக் காமுறுவர் மன்றமாசு தேற்ற தவர்"

சுருங்க சொல்லி விளங்க வைக்காத வரை பற்றி வள்ளுவர் கொண்ட கருத்து நீண்ட கையும் உடைய மாட்சிமைப்பட்ட பாண்டியன் என்பதை,

“ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பில்

தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி"

என்று கூறி சிறப்பித்தார். இத்தகைய தோற்ற பொலிவுடைய மன்னன் வீரமுறையினாய் விளங்கியிருந்திருப்பான் என்பதை விளங்க கூற வேண்டாம் அன்று உண்மையில் இவன் வீரம் சேர்ந்தவராக இருந்தவர் என்பதை உணர்த்துகிறது. இத்தகைய சிறப்புகளை உடையவர் சீத்தலைச் சாத்தனார் என்பது புலப்படுகிறது.

## முடிவுரை

இளங்கோவடிகள் முத்தமிழ் கல்வியில் மூத்தறிவுடையவர். இதனால் தான் இவருடைய நூலாகிய சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காவியமாக இவ்வுலகில் நிலவி வருகிறது. இளங்கோவடிகளார் புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்படுபவர். காப்பியங்கள் இயற்றுவதில் சிறப்பானவர் இருவர். இருவரும் உலகம் புகழும் உத்தமராகவும் விளங்குகின்றன. சீரும் சிறப்புமிக்க செந்தமிழ் மொழி. இக்காரணங்களைக் கண்டு இதன்பால் ஆர்வமும், அன்பும் கொண்டு இதனைப் பயின்றவர் பலர். அப்பலர் இனத்தாலும் சமயத்தாலும் வேறுபட்ட கொள்கையினர் ஆவர். தமிழால் ஒன்றுபடுத்தும் மொழியாகிய தமிழில் காப்பியம் படைத்தப் பெருமக்கள் என்பது விளங்குகின்றது.

## References

Balasubramaniyam, S. (2018) Thirukural, Thamarai Publications, Chennai, India

Gunasekaran, K.A. (2010) Pathitrupathu pathurai, International Institute of Tamil Studies, Chennai, India.

Subramaniyan, S.V. (2016a) Silapathikaram, Meyyapan Pathippagam, Chidambaram, India.

Subramaniyan, S.V. (2016b) Manimekalai, Meyyapan Pathippagam, Chidambaram, India.

Thandapani Durai, (2005) Manimekalai Theliurai, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License